| 5. புத்தூர் நிவா. கிளை | கிளை 21 பலாலி மேற்கு, கிளை 22 பலாலி மத்தி, கிளை 23 பலாலி கிழக்கு, கிளை 32 பலாலி சந்தி. |
| 6. கந்தரோடை நிவா. கிளை | கிளை 01 தெல்லிப்பளை கிளை 02 தெல்லிப்பளை. கிளை 03 வவணாவத்தை, கிளை 25 மயிலிட்டி கிழக்கு, கிளை 26 மயிலிட்டி வடக்கு, கிளை 28 பளை வீமன்காமம். |
| 7 தொட்டிலடி நிவா. கிளை | கிளை 07 கருகம்பனை, கிளை 08 இளவாலை, கிளை 43 சீந்திடந்தல் கிளை 44 மயிலங்கூடல். |
| 8 நவக்கிரி நிவா. கிளை | கிளை 18 வயாவிளான், கிளை 19 ஒட்டகப்புலம், கிளை 20 வயாவிளான் சந்தி, கிளை 39 குட்டியப்புலம் |

நா. தவநாதன்,
தலைவர்.

சி. முருகையா,
செயலாளர்.

05-02-1993.

(சி-2541)

## நீங்கா நினைவுகளின்
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 29 — 09 — 1929



இறைவன் அடியில்: 23 — 01 — 1992

## திருமதி பரமேஸ்வரி இராசையா

(திரு. இ. இராசையா, சமாதான நீதிவான்- பிரிய மனைவி)

திதி: 10 — 02 — 1993

ஓராண்டு ஓடிற்றம்மா! உயிர் உடலை விட்டகன்று பல்லாண்டு மறைந்தாலும், மறவோம் நின் திருவுருவை. மண்ணுலகில் மக்கள் பலர் வாழ்த்த வாழ்ந்தோய், விண்ணுலகில் விமலனடி சேர்ந்தின்று வாழ்வோய், பூவுலகில் உன் பிரிவால் வாடித் தவிக்கின்றோம் நாம்.

சிறப்புமிகு சீர்வாழ்வும் பெருஞ் செல்வப் பேறும் விட்டு, இறப்பதனைச் சாட்டாக்கி எமை விட்டுப் பிரிந்தாய் ஏனோ? வீட்டின் பேரொளி விளக்கே! திடீரென நீ அணைந்ததேனோ?

நாட்டில் நாம் மிகு நலிந்து நின் பிரிவால் வாடுகின்றோம். இறைவனடி சேர்ந்தாயோ? நீ சாந்தியுடன் மரண பயமின்றி வாழ கறைபடியா மனத்தோய், நின் சிரித்த முகம் மறக்கமாட்டோம். நிறைமனமாய் இறைவனடி இறைஞ்சுகிறோம் நின் ஆத்ம சாந்திக்காக!

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரி,
உற்றார், உறவினர்கள்.

''இந்திரப் பிரஸ்தம்''
221, கண்டி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(24560)

### சிந்தனைக்கு

தான் செய்வது அம்பலமாகாது என்பது உறுதியாகத் தெரிந்திருக்கும்போது ஒருவன் என்ன செய்வானோ, அதுவே அவன் உண்மையான ஒழுக்கத்தின் அளவுகோலாகும்.

— தாமஸ் மெக்காலே

ஈழநாதம்

81, [illegible] வீதி, யாழ்ப்பாணம் 10-02-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2023

# நரசிம்மராவின் கூற்று அப்பட்டமான பொய்

"நிச்சயமாக இலங்கைத் தமிழருக்கு எதிராக சதிவேலை எதிலும் இந்தியா ஈடுபடவில்லை" இவ்வாறு இந்தியாவின் பிரதம மந்திரி பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் இக்கூற்றினை இலங்கை விவகாரத்தில் இந்தியா எவ்வாறு நடந்து கொண்டது, எவ்வாறு நடந்து வருகின்றது. இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்ளாதவர்களும், அதனை நேரடியாக அனுபவிக்காதவர்களுமே ஏற்றுக் கொள்வார்கள். மற்றவர்கள் எவரும் இந்தியப் பிரதமரின் இக்கூற்றை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இந்தியா இன்று மட்டுமல்ல தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழரின் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளது. 1983 இல் இன வன்முறையால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் அடைக்கலம் தேடியபோது இலங்கைத் தமிழருக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் ஓர் இயக்கத்தை வளர்த்து, தமிழர் பலமான நிலையில் உருவாக இந்தியா உதவி புரியவில்லை, மாறாக, பல இயக்கங்களை வளர்த்து, ஆயுதங்களும், பொருளுதவியும் வழங்கி இலங்கைத் தமிழர்தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியது. இயக்கங்களுக்குள் முரண்பாட்டை வலுவடையச் செய்து மோதல்களை உருவாக்கியது.

அத்தோடு தமது நலனுக்கு உகந்தவாறான அரசியல் முடிவுகளை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து நிர்ப்பந்தங்களையும், அழுத்தங்களையும் போட்டவண்ணமே இருந்தது. இலங்கைத் தமிழரின் பேரில் தனது அரசியலையே நடத்தி வந்த இந்தியா தேவை ஏற்படும் போதெல்லாம் தமிழரைக் காட்டிக் கொடுத்தும் வந்தது.

1987 ஆம் ஆண்டில் அழையா விருந்தாளியாக இலங்கை வந்த இந்தியா இலங்கைத் தமிழர் நலன் என்பதை விட இந்தியாவின் நலன்கள் என்பதிலேயே முழுக் கவனம் செலுத்தியது. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் வெற்றி அளிக்கவில்லை எனத் தமிழர் சுட்டிக் காட்டியபோது தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் போரை ஆரம்…

## சண்முகதாசன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக தலைவரும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான நா. சண்முகதாசன் 74 ஆவது வயதில் நேற்று முன் தினம் இலண்டனில் காலமானார்.

தனது பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்டு 23 ஆவது வயதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டு முழுநேர அரசியல்வாதியாக தொழிற்பட்ட இவர் இறுதியில் சிங்கள இனவாதத்திற்கு எதிரான தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து எழுதியும் பேசியும் வந்தவர். இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்துக்கு எதிராக குரல் கொடுத்தவர்.

## சீருடை வழங்கல்

யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம் தமது மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் நிகழ்ச்சியை இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலையில் நடாத்த உள்ளது.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண பிதா இம்மனுவல் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சொலமன் சூ. சிறில் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள். [17]

### பிரதேச

வாய்] இரண்டாவது நாளாக மறியல்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. மக்கள் கிராமம் கிராமமாகத் தொடர்ந்து மறியல்போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை கடமைக்கு வந்த செயலக ஊழியர்கள் செயலகத்தைத் திறப்பதற்கு மறியல்போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் அனுமதிக்கவில்லை. பிரதம லிகிதர் திரு பசுபதியிடம் பொதுமக்களால் கையொப்பமிட்ட மகஜர் கையளிக்கப்பட்டு, உரிய அதிகாரியிடமிருந்து பதில்தரப்படும்வரை செயலகம் திறந்து இயங்குவதற்கு தாம் இடமளிக்கமாட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்னால் நேற்று நடைபெற்ற மறியல் போராட்டத்தை பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும், பொதுமக்களும் இணைந்து நடாத்தினர். இரண்டாவது நாளாக அலுவலகம் செயலிழந்தது. (யோ)(36)

# காந்தி சிலை தகர்ப்பு புலிகளுக்குத் தொடர்பில்லை

## ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

அண்மையில் விழுப்புரத்தில் காந்திசிலை தகர்க்கப்பட்டதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு எதுவும் இல்லை என இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தமிழ் நாடு சட்டசபையில் தெரிவித்தார்.

மேலும் இந்தக்குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்த இடத்தில் தமிழர் விடுதலைப்படை என்ற அமைப்பின் துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டதாகவும் அவற்றில் இட்டுவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும் வாசகங்கள் காணப்பட்டன என்றும் கூறினார்.

இந்த மூன்று சம்பவங்கள் பற்றிய வழக்கு கியூ பிரிவிற்கு மாற்றப்பட்டு தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது என்றும் இதுவரை மேற்கொண்ட விசாரணையிலிருந்து இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் தமிழர் விடுதலைப் படை, தமிழர் பாசறை போன்ற தீவிரவாத இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

### காங்கேசனிலிருந்து

வுப் பொருள்களின் விபரங்களை தெரிந்து கொண்டாலே அங்கிருந்து உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கு இலகுவாக இருக்கும். எனவே இது தொடர்பாக யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை தற்பொழுது காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் உள்ள உணவுக் கையிருப்புப்பற்றி அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இது சம்பந்தமான அவசர வானொலிச் செய்தி ஒன்றை யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் உடன் காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் பொருள்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (பா)(சி)

### புலிகளுடன்

தீவிர பரிசீலனைக்குட்படுத்தப்படும். இப்பரிசீலனையின் இறுதியில் குடாநாட்டிற்குள் உணவுப்பொருள்களை எடுத்து வரும் குறிப்பிட்ட நடைமுறைத் திட்டம் செயற்பாட்டுக்குச் சாத்தியமாகும் பட்சத்தில் இறுதி முடிவெடுப்பதற்காக மீண்டும் ஜெனிவாத் தலைமை அலுவலகத்தில் இருந்து உயர்அதிகாரிகள் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்யும். இவ் அதிகாரிகள் கொழும்பில் அரசஉயர் அதிகாரிகளுடன் இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவர். அதனைத்…

# புலிகளைக் காப்பாற்ற ஜெயலலிதா முயற்சி

## –காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களைக் கண்டித்து இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நேற்றுச் சட்டபேரவையிலிருந்துவெளிநடப்புச் செய்தார்கள். வெடிகுண்டுச்சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவையில் கூறியதை அடுத்தே காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதே விடுதலைப் புலிகளுக்கும் வெடிகுண்டுச் சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று முதலமைச்சர் கூறியதை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கண்டனம் செய்தார்கள்.

ஜெயலலிதா தெரிவித்த இந்தக் கருத்தைக் கண்டிக்கும் வகையிலும், எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தனது கருத்தைச் சபையில் தெரிவிக்க அனுமதி மறுத்ததற்காகவும் வெளிநடப்புச் செய்யப்பட்டது.

புலிகளைக் காப்பாற்றத் தமிழக அரசு முயல்கிறது போலத் தோன்றுகிறது என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குறுக்கிட்டபோது, அவையில் குழப்பம் ஏற்பட்டது.

கூச்சல் குழப்பத்துக்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுந்து முதலமைச்சரின் அறிக்கையின் மீது தமது கருத்துக்களைக் கூற முயன்றார். அப்போது சபாநாயகர் விதிகளின்படி, கவனஈர்ப்புத் தீர்மானத்தின்போது அந்தத்தீர்மானத்தை முன்மொழியாதவர்கள் பேசுவதற்கு அனுமதியில்லையென்று கூறினார். தமது கருத்தைச் சொல்ல பலமுறை முயற்சித்தும் சபாநாயகர் அனுமதி மறுத்ததால் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பின்தொடர அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

சட்டப்பேரவை விதிகளை அனுசரித்து நடக்க மறுத்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர் என்று பின்னர் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

பின்னர் காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், சம்பவம் நடந்து பதினைந்து நாட்களுக்கு மேலாகியும் இதுவரைஎவரும் கைது செய்யப்படாதது தமக்கு வியப்பளிக்கிறது என்றும், தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் செயற்படாமல் தடுப்பதே குண்டு வெடிப்புச் சம்பவங்களின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில் தமிழக சட்டப்பேரவையிலிருந்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தது தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமையலாமென்று அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்திரா காங்கிரசினுள் பிளவு அதிகரிக்கிறது

(டில்லி)

இந்தியாவின் ஆளும் கட்சிக்குள் பிளவு அதிகரித்து வருகின்றது. நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு…

தெரிவித்ததும் ஆத்திரம் தாங்காமல் கூட்டத்தை விட்டு வெளியேறினார் என்றும்,

பின்னர் ப[illegible]ரின் வேண்டுகோளுக்கு இணங்க செயற்குழு…

றினை இலங்கை விவகாரத்தில் இந்தியா எவ்வாறு நடந்து கொண்டது, எவ்வாறு நடந்து வருகின்றது. இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்ளாதவர்களும், அதனை நேரடியாக அனுபவிக்காதவர்களுமே ஏற்றுக் கொள்வார்கள். மற்றவர்கள் எவரும் இந்தியப் பிரதமரின் இக்கூற்றை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இந்தியா இன்று மட்டுமல்ல தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழரின் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளது. 1983 இல் இன வன்முறையால் பாதிக்கப்பட்டு இந்தியாவில் அடைக்கலம் தேடியபோது இலங்கைத் தமிழருக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் ஓர் இயக்கத்தை வளர்த்து, தமிழர் பலமான நிலையில் உருவாக இந்தியா உதவி புரியவில்லை, மாறாக, பல இயக்கங்களை வளர்த்து, ஆயுதங்களும், பொருளுதவியும் வழங்கி இலங்கைத் தமிழர்தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியது. இயக்கங்களுக்குள் முரண்பாட்டை வலுவடையச் செய்து மோதல்களை உருவாக்கியது.

அத்தோடு தமது நலனுக்கு உகந்தவாறான அரசியல் முடிவுகளை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து நிர்ப்பந்தங்களையும், அழுத்தங்களையும் போட்டவண்ணமே இருந்தது. இலங்கைத் தமிழரின் பேரில் தனது அரசியலையே நடத்தி வந்த இந்தியா தேவை ஏற்படும் போதெல்லாம் தமிழரைக் காட்டிக் கொடுத்தும் வந்தது.

1987 ஆம் ஆண்டில் அழையா விருந்தாளியாக இலங்கை வந்த இந்தியா இலங்கைத் தமிழர் நலன் என்பதை விட இந்தியாவின் நலன்கள் என்பதிலேயே முழுக் கவனம் செலுத்தியது. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் வெற்றி அளிக்கவில்லை எனத் தமிழர் சுட்டிக் காட்டியபோது தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் போரை ஆரம்பித்தது. ஆயிரக் கணக்கில் மக்களைக் கொன்றொழித்தது. அத்தோடு, பல நூற்றுக் கணக்கான போராளிகள் மரணிப்பதற்கும் காரணமாகியது.

இதன் பின்னர் அடைக்கலம் தேடி தமிழகம் சென்ற அப்பாவி மக்களை சர்வதேச விதிமுறைகளுக்கு மாறாகவும், ஏமாற்றியும் இலங்கைக்கு அனுப்பி வைத்தது, எவ்வாறெனினும் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்து விட வேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்தியது. செலுத்தியும் வருகின்றது;

இவை யாவற்றிற்கும் மேலாக இலங்கை, இந்தியக் கடற்பரப்பிற்கும் அப்பால் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப் பண்ணுவதிலும் அக்கறையாகச் செயற்பட்டு வருகின்றது. தமிழரின் சர்வதேசத் தொடர்பைத் துண்டித்து பலவீனப் படுத்த முற்பட்டுள்ளது.

மேலும் இனப்பிரச்சினைத் தீர்விற்கும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கும் இந்தியா தடையாகச் செயற்பட்டு வருகின்றது. இந்தியாவின் இப்போக்கே அண்மையில் தளபதி கிட்டு வீரமரணமடைய வேண்டிய அவல நிலையை ஏற்படுத்தியது.

அதாவது இலங்கைத் தமிழருக்கு எதிராக உலகளாவிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இந்தியா, இலங்கைத் தமிழருக்கு எதிராகச் சதி செய்யவில்லை என்றால், சதி என்பதன் அர்த்தம் என்ன? அவ்வாறு இவற்றைச் சதி இல்லை என்று யாரும் நம்புவதானால் அவர்கள் ஒன்றுமறியாத அப்பாவிகளாக இருக்கவேண்டும் அல்லது கடந்த காலத்தை மறந்த புத்தி சுவாதீனமற்றவர்களாக இருக்கவேண்டும்.

---

மணிக்கு பாடசாலையில் நடாத்த உள்ளது.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. பிதா இம்மனுவல் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர மல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சொலமன் சூ. சிறில் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள். [17]

---

## பிரதேச

வாய்] இரண்டாவது நாளாக மறியல்போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. மக்கள் கிராமம் கிராமமாகத் தொடர்ந்து மறியல்போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை கடமைக்கு வந்த செயலக ஊழியர்கள் செயலகத்தைத் திறப்பதற்கு மறியல்போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் அனுமதிக்கவில்லை. பிரதம லிகிதர் திரு பசுபதியிடம் பொதுமக்களால் கையொப்பமிட்ட மகஜர் கையளிக்கப்பட்டு, உரிய அதிகாரியிடமிருந்து பதிலைதரப்படும்வரை செயலகம் திறந்து இயங்குவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்னால் நேற்று நடைபெற்ற மறியல் போராட்டத்தை பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும், பொதுமக்களும் இணைந்து நடாத்தினர். இரண்டாவது நாளாக அலுவலகம் செயலிழந்தது. (யோ)(36)

---

## பாவனையில்

பெறுமதியான மேற்படி மருந்துப் பொருள்களில் அனேகமானவை முற்றாகப் பழுதடைந்துள்ளன. அல்லது பாவனைக்குரிய கால எல்லையைக் கடந்து விட்டன.

இவ்வாறான மருந்துப் பொருள்கள் தற்பொழுது கொழும்புத்துறைமுகத்தில் தரித்துநிற்கும் கப்பல்களில் ஏற்றப்பட்டுவருகின்றன.

இம் மருந்துப்பொருள்களின் முழுப்பெறுமதிக்குரிய பணத்தையும் மேற்படி அமைச்சு ஒதுக்கீடு செய்வதற்கும் தயாராக இல்லை இம் மருந்துப் பொருள்களின் பெறுமதியில் 50 சதவீதத்தை இவ் அமைச்சு பொறுப்பேற்றுக்கொள்வதாகவும் மிகுதி 50 சதவிகிதத்தை வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இருந்து பெறுவதற்கு யாழ். அரசாங்க அதிபரை நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (க)

---

## 10 இலட்சம்

தாய் மாருக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் போதிய போசாக்கு உணவு கிடையாமையே இதற்கு காரணம் என்றும் அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

---

அங்கிருந்து உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கு இலகுவாக இருக்கும். எனவே இது தொடர்பாக யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை தற்பொழுது காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் உள்ள உணவுக் கையிருப்புப்பற்றி அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இது சம்பந்தமான அவசர வானொலிச் செய்தி ஒன்றை யாழ். அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் உடன் காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் பொருள்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (யா)(சி)

---

## புலிகளுடன்

தீவிர பரிசீலனைக்குட்படுத்தப்படும். இப் பரிசீலனையின் இறுதியில் குடாநாட்டிற்குள் உணவுப்பொருள்களை எடுத்து வரும் குறிப்பிட்ட நடைமுறைத் திட்டம் செயற்பாட்டுக்குச் சாத்தியமாகும் பட்சத்தில் இறுதி முடிவெடுப்பதற்காக மீண்டும் ஜெனிவாத் தலைமை அலுவலகத்தில் இருந்து உயர்அதிகாரிகள் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்யும். இவ் அதிகாரிகள் கொழும்பில் அரசஉயர் அதிகாரிகளுடன் இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவர். அதனைத் தொடர்ந்து இவ் அதிகாரிகள் குழு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும், யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடாத்தும்.

இதன் பின்னரே முதற்கட்ட நடவடிக்கையாக கேரதீவு - சங்குப்பிட்டி கடற்பாதையூடாக குடாநாட்டுக்குள் உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் நடைமுறைக்காலத்தில் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு விதிகள் குறித்தும் ஏனைய நிபந்தனைகள் குறித்தும் அரசுக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபைக்குமிடையில் இருதரப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என்று கொழும்பில் இருந்து இறுதியாகக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

மேற்படி பாதையூடாக உணவுப் பொருள்களை குடாநாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ''பாதை சேவை'' என்ற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளது மேற்பார்வையில் ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. [க]

---

தலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவையில் கூறியதை அடுத்தே காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதே விடுதலைப் புலிகளுக்கும் வெடிகுண்டுச் சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று முதலமைச்சர் கூறியதை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கண்டனம் செய்தார்கள்.

ஜெயலலிதா தெரிவித்த இந்தக் கருத்தைக் கண்டிக்கும் வகையிலும், எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தனது கருத்தைச் சபையில் தெரிவிக்க அனுமதி மறுத்ததனாலும் வெளிநடப்புச் செய்யப்பட்டது.

புலிகளைக் காப்பாற்றத் தமிழக அரசு முயல்கிறது போலத் தோன்றுகிறது என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குறுக்கிட்டபோது, அவையில் குழப்பம் ஏற்பட்டது.

கூச்சல் குழப்பத்துக்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுந்து முதலமைச்சரின் அறிக்கையின் மீது தமது கருத்துக்களைக் கூற முயன்றார். அப்

மறுத்ததால் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பின் தொடர அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

சட்டப்பேரவை விதிகளை அனுசரித்து நடக்க மறுத்த இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர் என்று பின்னர் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

பின்னர் காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், சம்பவம் நடந்து பதினைந்து நாட்களுக்கு மேலாகியும் இதுவரைஎவரும் கைது செய்யப்படாதது தமக்கு வியப்பளிக்கிறது என்றும், தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் செயற்படாமல் தடுப்பதே குண்டு வெடிப்புச் சம்பவங்களின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில் தமிழக சட்டப் பேரவையிலிருந்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தது தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமையலாமென்று அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்திரா காங்கிரசினுள் பிளவு அதிகரிக்கிறது

(டில்லி)

இந்தியாவின் ஆளும் கட்சிக்குள் பிளவு அதிகரித்து வருகின்றது. நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் அர்ஜுன்சிங் பிரதமர் நரசிம்மராவ் மீது பல குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் என்றும், ஆனால் அவர் செயற்குழு உறுப்பினர் பலர் எதிர்ப்பு தெரிவித்ததும் ஆத்திரம் தாங்காமல் கூட்டத்தை விட்டு வெளியேறினார் என்றும்,

பின்னர் ப[illegible]ரின் வேண்டுகோளுக்கு இணங்க செயற்குழு கூட்டத்திற்கு திரும்பினார் என்றும் நேற்றும் செயற்குழு கூட்டம் தொடர்வதினால் முக்கிய முடிவு எடுக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வைத்திய அதிகாரிக்கு சேவைநலம் பாராட்டு

மன்னார் நானாட்டான் பிரதேச சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இடமாற்றம் பெற்ற பொன் சண்முகரெத்தினம் ஏ. எம். ஓ. அவர்களுக்கு சேவை நலம் பாராட்டுவிழா நானாட்டான் பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஏ. பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது. அவர் தலைமைவகித்து பேசுகையில் 25 வருட வைத்திய சேவை முதிர்வுடைய வைத்திய கலாநிதியின் நெருக்கடியான கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் இப்பகுதி மக்களுக்கு பேருதவியாக இருந்தது என்றும் வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றலாகி செல்லும் வைத்திய அதிகாரி அங்கும் தனது கடமையை சரிவரச் செய்வார் என்றும் கூறினார்.

நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. கே. கிருஷ்ணமூர்த்தியும் உரையாற்றினார்.

---

# கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக புவியற் கழகத்தினால் இன்று மாலை 3.00 மணியளவில் நடாத்தப்படும் கருத்தரங்கில் 'மத்திய கிழக்கு நாடுகளும் பிரச்சினைகளும்' என்றதலைப்பிலான பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றவுள்ளார்.

---

## கட்டுநாயக்காவில்

புலிகளுடன்நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்றும் இவருக்குப் பணவுதவி புரிந்த கோடீஸ்வரரான வர்த்தகர் ஒருவர் பற்றியும் விசாரணை செய்யப்பட இருப்பதாகவும் இரகசியப் பொலிசார்கூறியுள்ளனர்.

## ஆய்வுக் கட்டுரை அச்சிடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வுக் கட்டுரை புத்தக வடிவில் அச்சிட்டுத் தருவதற்குத் தகுதியான அச்சகர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் அளவு | — | 1/4 கிறவுண் |
| பக்கம் | — | 160 (அண்ணளவாக) |
| பிரதி | — | 500 புத்தகங்கள் |
| படங்கள் | — | 75 (தபால் அட்டை அளவில்) |
| புத்தகத்தின் கவர் | — | தடித்த, கடினமான மட்டையில் இரண்டு நிற அச்சுப்பிரதி செய்த கவர் இடப்படல் வேண்டும். |

புத்தகத்தின் உள்ளடக்கத்தை இப் பல்கலைக்கழகக் கல்விக் கிளையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1993-02-17 காலை 10-00 மணிக்கு முன்னாக 'நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஆய்வுக் கட்டுரை அச்சிடல்' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1993-02-17 காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
1993-02-09 இலங்கை. (சி-5972)

## கிளைச்சங்கப் பணிமனைத் திறப்பு விழா

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டட மேசன், வர்ணப்பூச்சுத் தொழிலாளர் சங்கத்திற்கான புதிய பணிமனை 10-02-93 (புதன்கிழமை) இன்று பிற்பகல் 3.00 மணிக்கு தலைமைச் செயலக தலைவர் திரு. அ. இல்வின் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இப்பணிமனை சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள லீனஸ் கட்டடத்தில் அமைந்துள்ளது.

மேற்படி கிளைச்சங்கத்தின் புதிய அங்கத்தவர்கள் தெரிவிற்கான பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1. தலைவர்: திரு. நீ. ச. டோமினிக் குருநகர்
2. உபதலைவர்: திரு. மா. ஞானதாஸ் மடம் வீதி
3. செயலாளர்: திரு. ஆ. அ. இராஜலிங்கம் மத்தியூஸ் வீதி
4. உபசெயலாளர்: திரு. ந. சின்னத்துரை ஆஸ்பத்திரி வீதி
5. பொருளாளர்: திரு. மு. மயில்வாகனம் கொழும்புத்துறை

நிர்வாகசபை உறுப்பினர்கள்:

1. திரு. சு. நாகராஜா ஈச்சமோட்டை
2. திரு. மு. பரமசாமி றக்கா வீதி

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் கொழும்பு செல்ல தங்களைப் பதிவு செய்த நோயாளர்களை நாளை வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமூகமளிக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

முதலாம், இரண்டாம் கப்பலில் கொழும்பு செல்ல பதிவு செய்த சகல நோயாளர்களும் பணிப்பாளர் காரியாலயத்திற்கு நாளை அடையாள அட்டை மற்றும் வைத்திய சான்றிதழ்களுடன் சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

## மண்ணெய் தட்டுப்பாடு மன்னார் விவசாயிகள் அவதி

(மன்னார்)

மன்னாருக்கு மண்ணெண்ணெய் அனுமதிப்பதில் சிறிலங்கா அரசு பெரும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து இப்பகுதி மக்களின் விவசாய செய்கை அழியும் நிலையில் உள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு முன்னர் மாதம் ஒன்றிற்கு 450 பரல் மண்ணெண்ணெய் அனுமதிக்கப்பட்டு வந்தது தற்போது இத்தொகை 45 பரல்களாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்ப் பயிர்கள் காயும் பழமுமாக வாடிவதங்கிப் போயுள்ளன. இதனால் இவர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தட்டுப்பாடு தொடர்பாக பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு மகஜரொன்றை அனுப்பி வைக்கவுள்ளனர்.

கையிருப்பிலுள்ள மண்ணெண்ணெயை அத்தியாவசிய சேவைக்குழு எல்லா விவசாயிகளுக்கும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கிவருகிறது.

## மூன்றாவது கப்பலையும் சேவையில் ஈடுபடுத்துக

—அரச அதிபர் செய்தி

"காங்கேசன் துறையூடாக யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் பொருட்களின் விநியோகம் ஆரம்பிக்கும் வரை மூன்றாவது கப்பலையும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துக" இவ்வாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக்கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி கோரிக்கை அடங்கிய அவசரவானொலிச்செய்தி ஒன்று நேற்று யாழ் அரசஅதிபரினால் அத்தியாவசியசேவைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச் செய்தியில் யாழ் குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் நெருக்கடி நிலைமையினை சீர்செய்யும் வகையில் யாழ். குடாநாட்டிற்கான பொருள்களை ஏற்றி இறக்கும் 'குமண', 'குமாரி' தவிர்ந்த மூன்றாவது கப்பலான 'மெகினால்' என்ற கப்பலின் சேவையினை காங்கேசன் துறையூடான உணவுப் பொருள் விநியோகம் ஆரம்பிக்கும்வரை தொடர்ந்து ஈடுபடுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது [யா] [சி]

## மீனவர் மீது தொடர்ந்து தாக்குதல்

சிறுத்தீவுக் கடல் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மண்டைதீவு றேடியோ நிலைய பகுதிக் காவலரண் சிறிலங்கா படையினர் சரமாரியாகச் சுட்டனரெனத் தெரிவிக்கபடுகிறது.

மீனவர்கள் மயிரிழையில் தொழில் உபகரணங்களைக் கைவிட்டு திரும்பநேர்ந்ததாகவும்

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியைச் சேர்ந்த யேசுராசா ஜெயன் என்பவரது இருபது டிங்கோ வலைகள் இத்தக்கணேரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டு

## பரியோவான் முதலுதவிச் சங்கமும் படையும் வடமராட்சி பிரதேசம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு திகதி மாற்றம்

"முதலுதவி நிதி" அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 14-04-1993 இல் இருந்து 14-02-1993 திகதிக்கு முற்போடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

முற்போடப்பட்ட திகதி அன்று இராமக்கோட்டிற்கு அருகாமையில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

எம்மால் வெளியிடப்பட்ட $A_1$ - A5000, $B_1$ - B5000 இலக்கங்கள் வரையிலான அனைத்துச் சீட்டுக்களும் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

எமக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் சீட்டிழுப்பில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

நன்றி

பரியோவான் முதலுதவி சங்கமும் படையும்
வடமராட்சி பிரதேசம். [சி-5975]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

09-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8238

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9492, 27-4162, 27-5137, 41-7563, 24-6293, 26-0375, 24-6639, 24-5416, 26-9558, 24-7356, 27-6741, 28-4672, 26-6075, 27-7263, 26-736 24-9609, 28-9449, 42-3267.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-7299, 24-3906, 26-2585, 26-561, 26-2941, 27-4920, 28-912, 42-1464, 26-1169, 42-9326, 27-6583, 24-5461, 28-6748, 26-0560, 41-8031 28-8444, 26-2637, 28-0854

## தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

பாணப் பல்கலைக்கழகம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஆய்வுக் கட்டுரை ஆசிரிடக்' என்று எழுதப்பட டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1993-02-17 காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
1993-02-09 இலங்கை, (சி-5972)

## கிளைச்சங்கப் பணிமனைத்
# திறப்பு விழா

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டட மேசன், வரிணட்பூச்சுத் தொழிலாளர் சங்கத்திற்கான புதிய பணிமனை 10 - 02 - 93 (புதன்கிழமை) இன்று பிற்பகல் 3 00 மணிக்கு தலைமைச் செயலக தலைவர் திரு. ஆ. ஆல்வின் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இப்பணிமனை சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள லீனஸ் கட்டடத்தில் அமைந்துள்ளது.

மேற்படி கிளைச்சங்கத்தின் புதிய அங்கத்தவர்கள் தெரிவிற்கான பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1. தலைவர்: திரு. நீ. ச. டோமினிக் குருநகர்
2. உபதலைவர்: திரு. மா. ஞானதாஸ் மடம் வீதி
3. செயலாளர்: திரு. ஆ. அ. இராஜலிங்கம் மத்தியூஸ் வீதி
4. உபசெயலாளர்: திரு. ந. சின்னத்துரை ஆஸ்பத்திரி வீதி
5. பொருளாளர்: திரு. மு. மயில்வாகனம் கொழும்புத்துறை

நிர்வாகசபை உறுப்பினர்கள்:

1. திரு. சு. நாகராஜா ஈச்சமோட்டை
2. திரு. மு. பரமசாமி றக்கா வீதி
3. திரு. அ. ஞானதுரை நாவாந்துறை
4. திரு. ந. வாமதேவன் இராசாவின் தோட்டம்

[4253]

இதனால் இப்பகுதியில

## மூன்றாவது கப்பலையும் சேவையில் ஈடுபடுத்துக
### —அரச அதிபர் செய்தி

"காங்கேசன் துறையூடாக யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் பொருள்களின் விநியோகம் ஆரம்பிக்கும் வரை மூன்றாவது கப்பலையும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துக" இவ்வாறு யாழ் அரச அதிபர் கா மாணிக்க வாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்

மேற்படி கோரிக்கை அடங்கிய அவசரவானொலிச்செய்தி ஒன்று நேற்று யாழ் அரசஅதிபரினால் அத்தியாவசியசேவைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச் செய்தியில் யாழ் குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுப் பொருள்களின் நெருக்கடி நிலைமையினை சீர்செய்யும் வகையில் யாழ். குடாநாட்டிற்கான பொருள்களை ஏற்றி இறக்கும் 'குமண', 'குமாரி' தவிர்ந்த மூன்றாவது கப்பலான 'மெலினால்' என்ற கப்பலின் சேவையினை காங்கேசன் துறையூடான உணவுப் பொருள் விநியோகம் ஆரம்பிக்கும்வரை தொடர்ந்து ஈடுபடுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது [யா][சி]

## மீனவர் மீது தொடர்ந்து தாக்குதல்

சிறுத்தீவுக் கடல் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மண்டைதீவு றேடியோ நிலைய பகுதிக் காவலரண் சிறிலங்கா படையினர் சரமாரியாகச் சுட்டனரெனத் தெரிவிக்கபடுகிறது.

மீனவர்கள் மயிரிழையில் தொழில் உபகரணங்களைக் கைவிட்டு திரும்பநேர்ந்ததாகவும்

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியைச் சேர்ந்த யேசுராசா விஜயன் என்பவரது இருபது டிங்கோ வலைகள் இத்தக்கனேரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டு நின்ற மேலும் பல மீனவர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எமது ஆசிரிவு நிலைய அங்கவருகைதரும் தெரிவிப்பதுடன் சிட்டிழுப்பில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

நன்றி

பரியோவான் முதலுதவி சங்கமும் படையும்
வடமராட்சி பிரதேசம். [சி-5975]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

09-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8238

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9492, 27-4162, 27-5137, 41-7563, 24-6293, 26-0375, 24-6639, 24-5416, 26-9558, 24-7356, 27-6741, 28-4672, 26-6075, 27-7263, 26-736 24 9609, 28-9449, 42-3267.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-7299, 24 3906, 26-2585, 26-561, 26-2941, 27 4920, 28-912, 42 1464, 26-1169, 42-9326, 27 6583, 24-5461, 28-6748, 26-0560, 41-8031 28 8444, 26 2637, 28-0854

# திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

இன்று (10-02 93) காலை 10 05 முதல் 12 15 மணிவரையில் வரும் சுபவேளையில்



# ★ நியூ யாழ். சைனீஸ் ★

என்னும் உணவகத்தை
ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதனால் அத்தருணம்
அனைவரையும் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

124, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(4252)

## தமிழீழ காவல்துறை
# பதவி வெற்றிடங்கள்
### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள் :- 8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த(உயர்தரம்)வரை

உயரம் :- 5' 6"

வயது :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 20.2.93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(சி/5973)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது